இல்லை. பல்கலைக் கழகம்தான் இதுபோன்ற ஆராய்ச்சிக் கூடங்களை இனிமேல் அமைக்க முடியும். ஏற்கனவே தஞ்சை மாவட்டம் வேப்பங்குளத்தில் இருக்கிறது. அந்த ஆராய்ச்சிக் கூடமே, சொல்லக் கூடிய கருத்துக்களை ஏற்றுப் பணி புரியும்.

செல்லம்பட்டி ஒன்றியத்தில் நெற்பயிர்களுக்குச் சேதம்

*வினா எண். 268 : திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ''புகையான்'' நோய் நெல் பயிர்களில் பரவி இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மூலம் புகையான் பாதிப்பு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் புகையான் நோய் பயிர்களைத் தாக்கி அதற்காக அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, வேளாண்மைத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டு அதற்கு மேலும் நான்கைந்து நாட்கள் மருந்து அடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நான்கு நாட்கள் தாமதம் ஆகி விட்டது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது போன்ற ஒட்டு மொத்த மருந்து தெளிப்புப் பணி, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அதை வேளாண்மைத்துறை செய்கிறது. 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள் அன்று தீர்மானத்தைப் பெற்று மறுநாளே மருந்து அடிக்கப்பட்டிருக்கிறது.

1981 பிப்ரவரி 10]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதற்குப் பிறகு அதிகாரிகள் அதன் பொறுப்பில் இருப்பதால், ஊராட்சி ஒன்றியத் தீர்மானத்தைப் பெறுவதற்கு முன்னால் புகையான் போன்ற கொடிய நோய்கள் பயிர்களைத் தாக்குவதைக் கருத்திற் கொண்டு, வரும் ஆண்டுகளில் வேளாண்மைத்துறைக்கு அறிவிக்கப் பட்டவுடனே நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைப் பெறுவது என்பது அவ்வளவு சிரமமான காரியமாக எனக்குத் தெரியவில்லை. அந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நெல் போன்ற பயிர்களுக்குப் புகையான் போன்ற வியாதிகள் அதிக அளவில் இப்பொழுது பரவிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஒரு வகையான புழுக்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தப் புழு 900 முட்டை இடுகிறது. இப்படிப்பட்ட புழுக்கள், பூச்சிகளை தவளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது வியாபாரிகள் போன்று இருப்பவர்கள் தவளைகளை பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவதால் பூச்சிகள் புழுக்கள் அதிகமாகி விடுகிறது. எனவே, தவளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காகப் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

பூமிதான இயக்கத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்

* வினா எண். 269 : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூமிதான இயக்க திட்டத்தின்கீழ் 1977 முதல் 1979 முடிய கையகப்படுத்திய மொத்தம் நஞ்சை, புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) விநியோகம் செய்யப்பட்டது எவ்வளவு ?

(இ) அதற்காக ஆன செலவு எவ்வளவு ?